**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**நோன்புப் பெருநாள் பிரசங்கம்**
**17 ஜூலை 2015 / 01 ஷவ்வால் 1436**

# <u>சிங்கப்பூரில் மத சகிப்புத்தன்மையை உருவாக்குதல்</u>

الله أكبر × ٩ كالي

اللهُ أكبر مَا تَعَالَتْ أَصْوَاتُ النَّاسِ بِالتَّكْبِيْرْ

اللهُ أكبر مَا تَفَتَّحَتْ أَبْوَابُ السَّمَاءِ فِى هَذَا الصَّبَاحِ الْكَبِيْرْ

اللهُ أكبر مَا تَنَزَّلَتْ عَلَيْنَا رَحْمَةُ الْإِلَهِ الْعَلِيِّ الْقَدِيْرْ

اللهُ أكبر مَا تَقَارَبَتْ قُلُوْبُ الْمُسْلِمِيْنَ فِى هَذَا الْيَوْمِ الْمُنِيْرْ

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،

لاَ إِلـــهَ إِلاَّ اللهُ وَ اللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِى أَمَدَّ أَوْلِيَاءَهُ بِالتَّوْفِيْقِ ، وَأَلْهَمَهُمْ كَلِمَةَ الْحَقِّ وَالتَّصْدِيْقِ ، وَأَرْشَدَهُمْ إِلَى أَوْضَحِ مَحَجَّةٍ وَطَرِيْقٍ ، وَجَعَلَهُمْ بِرَحْمَتِهِ خَيْرَ أُمَّةٍ وَفَرِيْقٍ ، أَحْمَدُهُ عَلَى النِّعْمَةِ الَّتِى بِهَا حَبَانَا ، وَأَشْكُرُهُ عَلَى الْمِلَّةِ الَّتِى بِهَا هَدَانَا.

وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُه، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّم وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَمَنِ اهْتَدَى بِهَدْيِه

أَمَّا بَعْد، فَيَا عِبَادَ الله، اتَّقُوا اللهَ أُوْصِي نَفْسِي وَإِيَّاكُم بِتَقْوَى اللهِ وَطَاعَتِهِ.

மஆஷரல் முஸ்லிமீன் வல்முஸ்லிமாத்! (முஸ்லிமான ஆண், பெண் சமுதாய மக்களே!)

சிறப்புமிக்க இந்நாளில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிற்கு நன்றிகளைத் தெரிவித்து, அவனைப் புகழ்வோமாக! உச்சகட்டமான பணிவுடன் தக்பீர்களை முழங்கி, அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்து இயம்புவோமாக! ரமதான் மாதம் முழுவதும் எண்ணற்ற அருட்கொடை களை அடைந்து கொள்ள, அல்லாஹ் நமக்கு அனுமதித்துள்ளான். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது முயற்சிகளையும் நற்காரியங்களையும் ஏற்றுக் கொள்வான்; நமது பாவங்களையும் தவறுகளையும் மன்னிப்பான்; ரமதான் மாதத்தில் நமது துஆக்களை (பிரார்த்தனைகளை) ஏற்று, நமக்கு பாவமன்னிப்பு வழங்குவான் என நாம் நம்புகிறோம். திருக்குர்ஆனின் ”அல்-ஃபஜ்ர்” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 27-30 வரையிலான வசனங்களில் எவர்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றானோ அவர்களில் நின்றும் அல்லாஹ் நம்மை ஆக்குவான் எனவும் நம்புகிறோம்:

يَٰٓأَيَّتُهَا ٱلنَّفْسُ ٱلْمُطْمَئِنَّةُ ﴿٢٧﴾ ٱرْجِعِىٓ إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً ﴿٢٨﴾
فَٱدْخُلِى فِى عِبَٰدِى ﴿٢٩﴾ وَٱدْخُلِى جَنَّتِى ﴿٣٠﴾

பொருள்: ஓ! அமைதியடைந்த ஆத்மாவே! (உன் நல்ல முடிவைக் கொண்டு) மகிழ்ந்த நிலையில், (மேலும் உன் இறைவனின்) திருப்தியைப் பெற்ற நிலையில் என்னுடைய நல்லடியார்களுடன் இணைந்து விடு; மேலும், என்னுடைய சுவனத்தில் புகுந்து விடு.

**<u>ரமதான், நம்மில் இஹ்சானை ஏற்படுத்தும்; அழிவை ஏற்படுத்தாது</u>**

ஜமாஅத்தார்களே!

அல்ஹம்துலில்லாஹ்! (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) சிங்கப்பூரில் அண்மையில் கடந்து சென்ற ரமதான் மாதத்தில் ”இஹ்சான்” (கருணைச் சிந்தனை) மற்றும் நற்காரியங்களால் நிரப்பப்பட்டது. நமது நிறுவனங்கள், சமுதாயம் மற்றும் நாட்டுக்கு நமது பங்களிப்புகளைச் செய்து உழைத்த நிலையில், பகல் பொழுதில் நமது குடும்பத்தாருடன் நோன்பு நோற்றோம். நோன்பு நம்மைப் பலஹீனப்படுத்திடவில்லை. நமது கடமைகளைப் புறக்கணிக்கும் படிச் செய்திடவில்லை. அதே சமயம், தூக்கத்திலிருந்து நம்மை நாம் எழுப்பி, வீட்டில் நமது குடும்பத்தார்களுடனோ அல்லது பள்ளியில் ஜமாஅத்துடனோ ”கியாமுல் லைல்” எனப்படும் இரவுத் தொழுகைகளைத் தொழும் ஆற்றல்களைப் பெற்றோம். ரமதான் மாதத்தில் அன்பு மற்றும் ”இஹ்சான்” எனும் கருணைச் சிந்தனையை மனிதகுலத்தாரிடம் பரப்பப்படுகிறது. ஒருவர் மற்றவர்களுக்கு உதவி செய்து, பகிர்ந்து

கொள்ளக்கூடிய உணர்வை ரமதான் ஏற்படுத்துகிறது. அல்ஹம்துலில்லாஹ்! இப்புனிதமிக்க மாதம் ஒற்றுமை மற்றும் அல்லாஹ்வின் "ரஹ்மத்" எனும் அருட்கொடைகளின் அடையாளமாக உள்ளது. இவையெல்லாம், நமக்கு மட்டும் பலனளிக்கவில்லை; மாறாக, அத்துடன் அகிலத்தார் அனைவருக்கும் அருள்களையும் கிருபையையும் ஏற்படுத்திய நமது பாசத்திற்குரிய இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கும் மரியாதையை ஏற்படுத்தின. "தக்வா" (இறை பயபக்தி), கிருபையான செயல்கள் மற்றும் குடும்ப வாழ்வில் இரக்க சிந்தனையை வெளிப்படுத்தியது போன்றவற்றின் மூலம், அல்லாஹ் திருக்குர்ஆனின் "அந்நஹ்ல்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 90-வது வசனத்தில் குறிப்பிட்டுள்ள கட்டளையைப் பற்றிப் பிடிக்க நாம் முயற்சித்துள்ளோம்:

۞ إِنَّ ٱللَّهَ يَأْمُرُ بِٱلْعَدْلِ وَٱلْإِحْسَٰنِ وَإِيتَآئِ ذِى ٱلْقُرْبَىٰ
وَيَنْهَىٰ عَنِ ٱلْفَحْشَآءِ وَٱلْمُنكَرِ وَٱلْبَغْىِ ۚ يَعِظُكُمْ
لَعَلَّكُمْ تَذَكَّرُونَ ﴿٩٠﴾

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்தும் படியும் நன்மை செய்யும் படியும் உறவினர்களுக்கு ஈந்துதவும் படியும் கட்டளையிடுகின்றான். மேலும், மானக்கேடான, வெறுக்கத்தக்க மற்றும் அக்கிரமமான செயல்களை விலக்குகின்றான். நீங்கள் படிப்பினை பெறும் பொருட்டு உங்களுக்கு அறிவுரை கூறுகின்றான்.

எனது சகோதர, சகோதரிகளே!

எனினும், நான் சற்று முன் வர்ணித்த ரமதானுக்கு மாற்றமான ரமதானையும் நாம் காண முடிகிறது. அதுதான் அக்கிரமச் செயல்கள், முரட்டுத்தனம் மற்றும் இரத்தம் சிந்துதல் போன்றவற்றால் நிரப்பப்படும் ரமதான் ஆகும். இத்தீய செயல்கள், முஸ்லிம்கள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள் மூலமாகவே இம்மாதத்தில் நிகழ்த்தப்படுகின்றன. அவர்கள் ரமதான் மாதத்தில் அப்பாவி மக்களைக் கொலை செய்கிறார்கள்; அதன் மூலம் இஸ்லாத்தின் தோற்றத்தையும் அதன் எழிலையும் மங்கச் செய்கின்றார்கள். அவர்கள் இனம், மதம், இடம் போன்ற எவ்வித வித்தியாசமும் பார்க்காமல் கொலை செய்கிறார்கள். அல்லாஹ்வின் புனித வீடு அமைந்துள்ள இடத்தையும் குறிவைக்கிறார்கள்.

எவர்கள் இவ்விதமான அக்கிரமச் செயல்களில் ஈடுபடுகிறார்களோ அவர்கள் பின்வரும் ஹதீதில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் பின்வருமாறு வர்ணிக்கப்படுகிறார்கள்:

”உங்களில் ஒரு கூட்டத்தார் உருவாகுவார்கள்; அவர்களுடைய தொழுகைகளை உங்களுடைய தொழுகைகளுடன் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுடைய தொழுகைகளை குறையுள்ளதாகக் காண்பீர்கள். அவர்களுடைய நோன்பை உங்களுடைய நோன்புடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுடைய நோன்புகளைக் குறையுள்ளதாகக் காண்பீர்கள். உங்களுடைய செயல்களை அவர்களுடைய செயல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுடைய செயல்களில் குறையிருப்பதாகக் காண்பீர்கள். எனினும், அவர்கள் திருக்குர்ஆன் ஓதுவார்கள்; ஆனால் அவர்களின் ஓதுதல்கள் அவர்களுடைய தொண்டைகளைக் கூட கடக்காது. வில்லிலிருந்து விடப்பட்ட அம்பானது, குறிவைக்கப்பட்ட பிராணியை நோக்கி வேகமாகச்

செல்வது போல், இவர்கள் சன்மார்க்கத்தை விட்டும் மிக வேகமாக ஓடுவார்கள்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே!

இதுதான், தற்கால வாழ்வின் எதார்த்த நிலையாகும். முஸ்லிம்களின் செயல்பாடுகளைப் பிரதிபலித்து இஸ்லாம் இரண்டு முகங்கள் மற்றும் தோற்றங்களுடன் காணப்படுகிறது. முதலாவது, அமைதி, நடுநிலை மற்றும் அபிவிருத்திகளுக்கு ஊக்கமளிக்கின்ற மார்க்கம் எனும் தோற்றத்திலும், இரண்டாவது, தீவிரவாதம், பயங்கரவாதம் போன்றவற்றைத் தூண்டுகின்ற, அதனைப் பின்பற்றுபவர்களை வன்முறை மற்றும் குழப்பத்தின் பால் அழைக்கின்ற மார்க்கம் எனும் தோற்றத்திலும் காணப்படுகிறது. இஸ்லாத்தின் இந்நிலை குறிப்பாக, இளைய தலைமுறையினரைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது என்பது மட்டுமல்ல, இஸ்லாம் சம்பந்தமாக உலக மக்களிடம் தவறான எண்ணங்களையும் ஏற்படுத்துகின்றது. இறைத்தூதர்(ஸல்) செய்துள்ள பின்வரும் உபதேசம் முற்றிலும் உண்மையாகும்:

”இஸ்லாத்தின் உண்மையானப் போதனைகளை வெளிச்சமாக்குவதற்கும், மற்றவர்களுக்கு நன்மைகளை ஏற்படுத்துவதற்கும் ஒவ்வொருவரும் கடினமாக உழைக்க வேண்டியது வரும்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

இஸ்லாத்திற்கு இவ்விதமான பின்னணிகள் ஏற்பட்டுள்ள நிலையில், நாம் யதார்த்த நிலையைப் புறக்கணித்து ஒழிந்து கொள்ளவோ, இவ்விஷயத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் சாதிக்கவோ முடியாது.

நேரான பாதையில் தொடர்ந்து இருப்பதற்கான திட நம்பிக்கையையும் சகிப்புத் தன்மையையும் நாம் உருவாக்கக் கடமைப்பட்டுள்ளோம். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் காட்டப்பட்ட வழியையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். சன்மார்க்கத்தைச் செயல்படுத்துவதற்கான கொள்கைகளில் ஒன்றை ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது ஹதீதில் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்:

"மார்க்கம் மிகவும் இலகுவானதாகும். எவரும் தனது மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதில் கடும் சுமைகளைத் தன் மீது ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம்; அவ்வாறு செய்தால் அவரால் தொடர்ந்து மார்க்கத்தைப் பின்பற்ற முடியாமலாகி விடும். எனவே, மார்க்கத்தைப் பின்பற்றுவதில் வரம்பு மீறி செயல்பட வேண்டாம்; எனினும், மார்க்கத்தைப் பரிபூரணமாகப் பின்பற்றி, நீங்கள் நற்கூலி வழங்கப்படுவீர்கள் எனும் சுபச் செய்தியை அடைவதற்கு முயலுங்கள்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

மார்க்கத்தை விட்டும் நடுநிலை அகற்றப்படும் போது, சமநிலையான போக்கை நாம் இழந்து விடுகிறோம். நம்மிடம் சமநிலையானப் போக்கு காணப்படவில்லையெனில், சன்மார்க்கத்தைப் பரிபூரணமாகப் புரிந்து செயல்படுவதில் தோல்வி கண்டு விடுவோம். சமநிலையைக்

கடைப்பிடிப்பது மிகவும் அவசியமாகும். காரணம், எத்தனையோ விஷயங்கள் இஸ்லாமியப் போதனைகள் எனும் போர்வையில் காணப்படுகின்றன. அவற்றின் விஷயத்தில் நாம் கவனக்குறைவாக இருந்தால் நாம் வழி தவறி விட வாய்ப்புள்ளது.

இன்று, நாம் பல எதிர்மறையான சக்திகளைக் காண்கிறோம். அவை, மத சம்பந்தமான அமைதி நிலவும் நமது நாட்டில் ஒற்றுமையின்மை மற்றும் வெறுப்பின் விதைகளை விதைத்து வருகின்றன. மார்க்கத்தைப் புரிவதிலும் கடைப்பிடிப்பதிலும் தனித்து நிற்பதற்கு அவை தூண்டுகின்றன. வித்தியாசமான கருத்துக்களைப் புறக்கணிக்கின்றன. ஆனால், வேற்றுமை, வித்தியாசம் என்பது மனிதகுலத்திடம் இயற்கையாகக் காணப்படும் ஒன்றாகும். சில தீவிரமான சிந்தனைகள் முஸ்லிம்களிடம் கடுமையான மனப்பான்மையை உருவாக்கி வருகின்றன. உதாரணமாக, அச்சிந்தனைகள், இந்நவீன காலத்தில் வாழும் விஷயத்தில் முஸ்லிம்களிடம் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. சிங்கப்பூர் போன்ற மதச்சார்பற்ற நாட்டில் வாழும் நிலையில் சன்மார்க்கத்தைப் பரிபூரணமாகப் பின்பற்ற இயலாது என அவை கருதுகின்றன. "ஐ.எஸ்.ஐ.எஸ்" எனப்படும் சில தீவிரவாத வகுப்பினர், இஸ்லாமிய நாடு என எதைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்களோ அதன் பக்கம் இடம் பெயர்வது அவசியம் எனவும் அழைப்பு விடுக்கின்றனர். இக்கருத்துகளெல்லாம் சில இளைஞர்களின் உள்ளங்களில் விஷத்தைத் தூவுகின்றன. அத்தீவிரமான வகுப்பாருடன் சேர்வதைத் தூண்டுகின்றன.

தற்கால முஸ்லிம்கள் மத சகிப்புத்தன்மையுடனும் கவனமாகவும் இருப்பது அவசியமாக உள்ளது. அதே சமயம், நமது பாசத்திற்குரிய மார்க்கம் நமக்கு வழிகாட்டியுள்ளதன் பிரகாரம் நமது கல்வியறிவையும்

புரிந்துணர்வையும் அதிகரித்துக் கொள்வதும் அவசியமாக உள்ளது. கல்வியறிவு தான், இது போன்ற தீவிரமான, கடுமையான, தனிப்பட்ட கருத்துக்கள் மார்க்கத்தின் உண்மையான போதனைகளா? இந்நாட்டில் வாழ்வது இஸ்லாமியப் போதனைகளுக்கு எதிரானதா? நாம் வாழும் சூழ்நிலைகள் சவால்மிக்கதாக இருப்பின் நமது "ஈமான்" எனும் இறை நம்பிக்கையும் இஸ்லாமிய மார்க்கப் பற்றும் குறைந்து விடும் என்பது உண்மையா? எனக் கேள்விகளைக் கேட்கத் தூண்டும்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அறிந்து கொள்ளுங்கள்! நாம் எங்கிருந்தாலும் கிருபையான செயல்களைப் பரப்புவதிலும் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதிலும் தொடர்ந்து பங்காற்றுவதற்கான உச்சகட்டமானத் தன்னம்பிக்கையை உருவாக்க வேண்டும் என இஸ்லாம் நமக்குப் போதிக்கின்றது. இம்மதிப்பீட்டை இறைத்தூதர் யூசுப் (அலை) அவர்களின் வாழ்வில் நாம் காணலாம். எகிப்து நாட்டின் அரசனும் அதன் மக்களும் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்த போதிலும் அந்நாட்டின் வளர்ச்சிக்காக யூசுப் (அலை) பங்காற்றினார்கள். நபி முஹம்மது(ஸல்) அவர்களின் தோழர்கள் அபீசீனியா நாட்டில் இருந்த போது, அவர்களும் அவ்வாறே பங்காற்றினார்கள். அவர்கள் அங்கு சிறுபான்மை மக்களாக இருந்த போதிலும் அந்நாட்டின் அமைதிக்காகப் பங்காற்றினார்கள். எனவே, மற்றவர்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு நாட்டில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்வது இஸ்லாமியப் போதனைகளுக்கு எதிரானதல்ல என்பது தெளிவாகப் புலனாகிறது. உண்மையில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் மதீனாவுக்கு இடம் பெயர்ந்து சென்ற போது, அங்கு அவர்கள் சிறுபான்மையினராகவே இருந்தார்கள். எனினும், மதீனாவின்

உடன்பாடான முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் அவர்கள் பங்காற்றினார்கள்.

நமது முற்கால தலைமுறையினர், நமது பாட்டனார்கள் இந்நாடு மற்றும் இந்நாட்டின் சமூக மக்களுக்காகப் பங்காற்றியுள்ளார்கள். அவர்கள் பல பள்ளிவாசல்களைக் கட்டினார்கள். "த·ஃவா" எனும் இஸ்லாமிய அழைப்புப் பணியையும் அத்துடன் பொது நலச் சேவைகளையும் செய்தார்கள். அதன் மூலம், நாம் இந்நாட்டில் முறைப்படுத்தப்பட்ட வகையில் இஸ்லாத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கலாம் என்பதை உறுதி செய்யும் வகையில் அடித்தளமிட்டுள்ளார்கள். சிங்கப்பூரில் நாம் முஸ்லிம்களாக வாழ முடியும் என்பதில் அவர்கள் உறுதியுடன் காணப்பட்டார்கள். அவர்களது சேவைகளின் பலனாக, அவர்கள் ஏற்படுத்திய நிலையான உயிரோட்டத்தின் காரணமாக, இன்று நாம் பல பலன்களை அடைந்து வருகிறோம். குறிப்பாக, நமது பாசத்திற்குரிய இந்நாட்டில் மத சம்பந்தமான அமைதியை அனுபவித்து வருகிறோம். இங்கு, சன்மார்க்க வாழ்க்கை, குறிப்பாக, ரமதான் மாதத்தில் மிகத் தெளிவாகத் தென்படுகிறது. அண்மையில் கடந்து சென்ற ரமதான் மாதம் சிங்கப்பூரில் முஸ்லிம்கள் அனைவருக்கும் அருளாக அமையும் சமுதாயமாக ஆக முடியும் என்பதை நீரூபிப்பதாக உள்ளது. இவைதானே இஸ்லாத்தின் உண்மையானப் போதனைகளாக இருக்க முடியும்?

**<u>சிங்கப்பூர் சூழ்நிலையில் இஸ்லாத்தைச் செயல்படுத்துவதும் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதும்</u>**

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

தற்காலத்தில் ஏற்படுள்ள தீவிரமான சிந்தனைகளும், ஒருவரது இறைநம்பிக்கைக்குச் சவாலாக அமையும் வித்தியாசமான வாழ்க்கை முறைகளும் விழிப்புடன் இருக்குமாறு நம்மைக் கேட்டுக் கொள்கின்றன. இவ்விஷயங்களை நாம் இலகுவானதாகக் கருதி விட முடியாது. சமுதாயத்தின் சூழ்நிலை மற்றும் தேவைகளுக்குத் தக்கவாறு இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளும் போக்கை நாம் தொடர்ந்து முன்னேற்றுவதின் பால் அவசியமாகின்றோம். இதனை மற்றொரு வார்த்தையில் சொல்வதாக இருந்தால், இஸ்லாமிய வழிமுறைகளின் வேற்றுமைகளைக் கருத்தில் கொள்ளும் புரிந்துணர்வை வளர்ப்பது அவசியமாகும். அவ்வேற்றுமைகள் விசாலமாக மட்டுமல்ல, ஆழமாகவும் உள்ளன. அப்புரிந்துணர்வு சில கொள்கைகளால் வழிகாட்டப்பட வேண்டும். அக்கொள்கைகள், சிக்கலான விஷயங்களில் சமுதாயத்துக்கு ஆழமாகச் சிந்திக்கும் ஆற்றல்களை வழங்குபவையாக இருக்க வேண்டும்.

எந்த இஸ்லாமியச் சிந்தனைகள், முஸ்லிம்களிடம் உடன்பாடான சிந்தனைகளை ஏற்படுத்துமோ, குடும்பங்களை சிறந்த குடும்பங்களாக ஆக்கி, அதன் மூலம் சமுதாயத்தை உறுதியானதாக முன்னேற்றுவதில் முஸ்லிம்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துமோ அப்படிப்பட்ட சிந்தனைகளை நாம் உருவாக்க வேண்டும். எந்த இஸ்லாமியச் சிந்தனைகள், ஆன்மீக ரீதியில் உறுதியான சமுதாயமாக நாம் ஆகுவதற்கு நம்மை ஆர்வப்படுத்துமோ, நற்பண்புகளுடன் கூடிய சமுதாயமாக ஆகுவதற்கும், பல துறைகளில் திறன்மிக்க சமுதாயமாக ஆகுவதற்கும் ஆர்வமூட்டுமோ அப்படிப்பட்ட சிந்தனைகளை நாம் பெறுவது அவசியமாகும். இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் ஒழுக்க மாண்புகள் மற்றும் நற்பண்புகளுடன் கூடிய இஸ்லாமியச் சிந்தனைகளை நாம் பெற்றிருப்பது அவசியமாகும்.

இப்படிப்பட்ட இஸ்லாத்தைத் தான், நாம்  நமது முன்னோர்களிடமிருந்து வாரிசுச் சொத்தாக சிங்கப்பூரில் பெற்றுள்ளோம், இப்படிப்பட்ட இஸ்லாத்தைத் தான் நமது பிள்ளைகளுக்கு வாரிசுப் பொருளாக விட்டுச் செல்ல நாம் விரும்புகிறோம். மத சம்பந்தமான புரிந்துணர்வு எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். வருத்தம் மற்றும் அழிவின் பால் அழைக்கும் அழைப்புகளால் எளிதில் அசைக்க முடியாத இஸ்லாமியப் புரிந்துணர்வாக அது இருக்க வேண்டும்.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

**<u>இளைஞர்களுடனான நமது உறவுகளைப் பலப்படுத்துவது</u>**

இளைஞர்கள்  நாம் ஆதரவு வைக்கும் நபர்களாகவும், சிங்கப்பூரில் இஸ்லாத்தின் வருங்காலமாகவும் உள்ளார்கள். எங்களது அன்பிற்குரிய இளைய சமுதாயமே! உங்கள் மூலமாகவே இஸ்லாமியப் போதனைகள் மனிதகுலத்திடம் மரியாதைகளைப் பெறும் என நாங்கள் ஆதரவு வைக்கின்றோம். எனவே, சிறந்த இஸ்லாமியக் கல்வியறிவை, கற்றறிந்த, நம்பிக்கைக்குரிய, அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து பெறுவதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். எந்த ஆசிரியர்கள் ஒற்றுமையின்மைக்கு ஆர்வமூட்டுகிறார்களோ, கர்வம் கொண்டு, மற்றவர்களை எளிதில் ”வழிதவறியவர்கள்” அல்லது ”கா.ஃபிர்கள்” எனக் குற்றம் சாட்டுகிறார்களோ அப்படிப்பட்ட ஆசிரியர்களை அணுகக் கூடாது. அவர்களைப் புறக்கணிக்க வேண்டும். இஸ்லாம் அருள்களைப் பரப்புமாறு நமக்குப் போதிக்கிறது; மற்றவர்கள் விஷயத்தில் தீர்ப்பளிக்க அல்ல. இமாம் இப்னு சீரீன் (ரஹ்) கூறுகிறார்கள்:

”நிச்சயமாக கல்வியறிவு தான் மார்க்கம் ஆகும்; எனவே, கல்வியறிவை எங்கிருந்து பெறுகிறீர்கள் என்பதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்” (ஸஹீஹ் முஸ்லிம்)

நீங்கள் இளைஞர்கள் எனும் ரீதியில், தற்காலத்திலோ அல்லது வருங்காலத்திலோ பல சவால்களை எதிர்கொள்வீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். உங்களிடம் ஆயிரக்கணக்கான கேள்விகள் உருவாகலாம். சில கேள்விகள் மார்க்கம் சம்பந்தப்பட்டதாகவும், சிலவை உணர்வு சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். கேள்விகள் எதுவாக இருப்பினும் அதற்கு சிறந்த பதில்களைப் பெற, உங்களுடைய பெற்றோர்கள், சிங்கப்பூரில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் சன்மார்க்க ஆசிரியர்களையே நீங்கள் அணுக வேண்டும்.

பெற்றோர்களே! நீங்களும் உங்கள் பங்களிப்புகளைச் செய்வது அவசியமாகும். உங்களுடைய இளைஞர்களை அணுகும் போது கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். அவர்களின் சவால்களையும் சிந்தனைப் போக்குகளையும் அறிந்து கொள்ளுங்கள்! அவர்கள் தவறான பாதையில் இருப்பதாக நீங்கள் அறிந்தால் அவர்களை அன்பாக அணுகிப் பேசுங்கள்.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

யா அல்லாஹ்! யா ரஹ்மான்! யா ரஹீம்! உன்னையே நாங்கள் நம்பி இருக்கின்றோம். உனது உதவியின்றி நாங்கள் பலஹீனமானவர்களாக ஆகி

விடுவோம்; எனவே எங்களைப் பலப்படுத்துவாயாக! யா ரஹ்மானே! நாங்கள் பல பாவங்களைப் புரிந்து விட்டோம்; தயவுசெய்து எங்களை மன்னிப்பாயாக! உன்னிடமின்றி வேறு யாரிடம் நாங்கள் திரும்ப முடியும்? நீ தான் வல்லமைமிக்க இறைவனாக இருக்கின்றாய். எங்களின் தவறுகளை அதிகம் மன்னிப்பவனாக இருக்கின்றாய். உனது அருள் பார்வையால் எங்களை நோக்குவாயாக!

யா அல்லாஹ்! தயவுசெய்து எங்களின் அனைத்து நற்காரியங்களையும் வணக்க வழிபாடுகளையும் ஏற்றுக் கொள்வாயாக! உனக்கு அடிபணிந்து வாழ்வதற்காக, எங்களுக்கும் எங்கள் குடும்பத்தார்களுக்கும் நீண்ட ஆயுளைக் கொடுப்பாயாக! நீ எங்களுக்கு வழங்கும் வெற்றியை பொருள்மிக்கதாகவும், உனது அன்பு மற்றும் திருப்தியால் நிரப்பப்பட்டதாகவும் ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! அதிகம் மன்னிப்பவனே! அதிகக் கிருபையாளனே!

ரமதான் மாதம் வந்து, கடந்து சென்று விட்டது. எனினும், நாங்கள் இன்னும் உனது வழிகாட்டுதலை எதிர்பார்த்தவர்களாகவே இருக்கின்றோம். உனது திருப்தியையும் உனது அன்பையும் நாங்கள் நாடுகின்றோம்.

மார்க்கப்பற்று மிக்க, அதே சமயம், அனைவருக்கும் அருள்களை ஏற்படுத்துகின்ற சமுதாயமாக நாங்கள் ஆகுவதற்கு எங்களுக்கு வழிகாட்டுவாயாக! யா அல்லாஹ்! இஸ்லாத்தின் தோற்றத்தை அழகாக, உயர்வானதாக ஆக்கக்கூடிய, இஸ்லாத்தின் புனிதத்தைப் பாதுகாக்கக் கூடிய இஸ்லாத்தின் தூதுவர்களாக நாங்கள் ஆகுவதற்கு எங்களுக்கு வழிகாட்டுவாயாக! இஸ்லாமியப் புரிந்துணர்வு எப்படி இருக்க வேண்டுமென நீ விரும்புகிறாயோ அப்படிப்பட்ட புரிந்துணர்வை எங்களுக்கு வழங்குவாயாக! எவர்கள் உனது பார்வையில் மரியாதைக்குரியவர்களாக

உள்ளார்களோ அவர்களில் நின்றும் எங்களையும், எங்களின் குடும்பத்தார்களையும் ஆக்கக் கூடிய இஸ்லாமியப் புரிந்துணர்வை எங்களுக்கு வழங்குவாயாக!

தவறான பாதைகள் மற்றும் அறியாமைகளை விட்டும், தீமைகள் மற்றும் நோவினைகளை விட்டும் எங்களையும் எங்கள் குடும்பத்தார்களையும் பாதுகாப்பாயாக! எங்கள் சமுதாயத்தை வெற்றிமிக்க, அமைதியான, அபிவிருத்திமிக்க சமுதாயமாக ஆக்குவாயாக!

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.

**Second Sermon**
**28 July 2014 / 1 Syawal 1435**

الله أكبر **7x**

اَلْحَمْدُ لله الَّذِى أَعَادَ الأَعْيَادَ وَكَرَّرَ. أَحْمَدُهُ سُبْحَانَهُ اَنْ خَلَقَ وَصَوَّرْ. وَأَشْهَدُ اَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، شَهَادَةً يَثْقُلُ بِهِ الْمِيْزَانَ فِى الْمَحْشَرْ. اَللَّهُمَّ فَصَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ الْفَائِزِينَ بِالشَّرَفِ الأَفْخَرْ.

أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهْ وَلاَ تَمُوتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُونَ.

وَصَلُّوا عِبَادَ اللهِ عَلَى رَسُولِ الْهُدَى وَخَيْرِ الْوَرَى فَقَدْ أَمَرَكُمْ بِذَلِكَ الْمَوْلَى جَلَّ وَعَلاَ حَيْثُ قَالَ: إِنَّ اللهَ وَمَلاَئِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِي، يآ أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا.

اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى رَسُولِكَ الْمُجْتَبَى وَنَبِيِّكَ الْمُصْطَفَى سَيِّدِنَا مُحَمَّدٍ أَفْضَلِ الْخَلْقِ وَخَيْرِ الْوَرَى. وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَهْلِ الصِّدْقِ وِالْوَفَى.

اَللَّهُمَّ وَارْضَ عَنِ الْخُلَفَاءِ الرَّاشِدِينْ أَبِى بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانً وَعَلِي، وَعَنْ بَقِيَّةِ الصَّحَابَةِ وَالْقَرَابَةِ أَجْمَعِينْ وَتَابِعِيهِمْ إِلَى يَوْمِ الدِّينْ.

اَللَّهُمَّ اغْفِرْ لِلْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتْ اَلأَحْيَاءِ مِنْهُمْ وَالأَمْوَاتْ إِنَّكَ قَرِيْبٌ مُجِيبُ الدَّعَوَاتْ وَغَافِرُ الذُّنُوبِ وَالخَطِيئَاتْ. رَبَّنَا ظَلَمْنَا أَنْفُسَنَا وَإِنْ لَمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ. رَبَّنَا لاَتُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الْوَهَّابْ. رَبَّنَا آتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَفِى الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارْ. وَأَدْخِلْنَا الْجَنَّةَ مَعَ الأَبْرَارْ. يآ الله يآ عَزِيْزْ يآ غَفَّار.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَالْبَغْـــيِ يَعِظُكُـــمْ لَعَلَّكُـــمْ تَذَكَّرُونْ. فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ وَلَذِكْرُ اللهِ أَكْبَـــرْ. وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونْ.